தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

திங்கட்கிழமை 1983 சனவரி 31

தை 18, துந்துபி — திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9·00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

''நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது''

நுட்பமான பொருள்களைக் கேட்டு அறிவினை வளர்த்துக் கொள்ளாதவர், வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக இருத்தல் இயலாது.

1. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

வாலிநோக்கம் மீன்பிடி துறைமுகம்

*வினா எண் 61—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலிநோக்கம் மீன்பிடி துறைமுக கட்டுமானத்திற்கு நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அந்தப் பணி எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ): மத்திய அரசு 77,00,000/ செலவில் இத்துறைமுக கட்டுமான பணியை மேற்கொள்ள இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் ஒப்புதல் அளித்தது. இதில் 50 சதவீத செலவினத்தை மத்திய அரசும் மீதமுள்ள 50 சதவீத செலவினத்தை மாநில அரசும் ஏற்கும். இப் பணியினை விரைவில் துவங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கட்டுமானப்பணி துவங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1980 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்

வாலிநோக்கத்தில் சிறிய மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்காக ரூ. 11 இலட்சம் மாநில அரசால் ஒதுக்கப்பட்டது. அந்தப்பணி இதுவரையில் துவக்கப்படாமல் இருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலிநோக்கம் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக காத்திருந்தோம். மத்திய அரசு சென்ற ஆண்டு ஒப்புதலைத் தந்தது. முதலில் 60 இலட்சம் ரூபாய் என்று கணக்கிட்டோம். அவர்கள் ஒப்புதல் கொடுத்தபோது அதனுடைய மதிப்பீடு 77 இலட்சம் ரூபாய் வருகிறது என்று கருதி அதற்கு மத்திய அரசு ஒப்புதல் தந்தது. அதற்கு பிறகு விலைவாசிகள் உயர்வின் காரணமாக அண்மையில் 94.32 இலட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 94.32 இலட்சம் ரூபாய்க்கான அனுமதி வேண்டும். அதிலே 50% மத்திய அரசும் 50% மாநில அரசும் செலுத்த வேண்டும்.

செடி, மரங்களை அழித்து நிலம் சமப்படுத்தும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீனைப்பதப்படுத்தும் கூடத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மீன்பிடி துறைமுகம் அமைக்கும் இடத்தை மண்கூட்டி தயார் செய்யவும் பற்றுச்சுவர் கட்டவும் ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நாம் ஓரளவிற்கு செலவழித்தாலும் நம்முடைய 50 சதவீதத்திலே சரிக்கட்டப்படும். மத்திய அரசிடத்திலே 50 சதவீதம் கோரப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, வாலிநோக்கம் சிறிய மீன்பிடி துறைமுகத்திற்கு ஒரு திட்டமும் சிறிய கப்பல் துறைமுகத்திற்கு ஒரு திட்டமும் தனித்தனியாக அங்கீகரிக்கப்பட்டு நிதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்களும் ஒரே இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. இந்த இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து ஒரே முறைப்படி செயல்படுத்துவதற்கு அரசு ஆய்வு செய்து ஆணை பிறப்பித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுக கட்டுமானம் பற்றியுள்ள கேள்வியாக இருப்பதால் அதுபற்றி விவரங்கள் மட்டும் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டால் இரண்டினுடைய நிலைமை என்ன என்பதைத் தெரிவிக்க இயலும்